மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
02.09.2022 வெள்ளிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

## இலங்கைக்கு பெரும் நன்மைகள்

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பிரித்தானியாவின் திட்டம் குறித்து அந்நாட்டு ஜனாதிபதி தகவலொன்றை வெளியிட்டுள்ளார். அதற்கமைய, பிரித்தானியாவின் குறித்த திட்டத்தின் காரணமாக இலங்கைக்கு பெரும் நன்மைகள் வழங்கப்படவுள்ளதாக அந்நாட்டு பிரதமர் அறிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே பிரித்தானிய பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார். அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஜனாதிபதி ஊடகப்பிரிவு இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளது.

## இலங்கைக்கு உதவ அமெரிக்கா தயார்

சர்வதேசநாணயநிதியத்துடன்இலங்கைதற்காலிக உடன்படிக்கையை எட்டியுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. அத்துடன் இலங்கைக்கு தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சர்வதேச நாணய நிதியமானது உதவும் சிறந்த கருவியாகவும், அணுகுமுறைகள் மற்றும் வளங்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், இலங்கைக்கு தொடர்ந்தும் உதவ அமெரிக்கா தயாராக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

## மத்திய வங்கி ஆளுநருக்கு எதிரான சதியை வெளிப்படுத்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



நாட்டை வங்குரோத்தடையச் செய்யும் சதித்திட்டத்திற்கு கடந்த அரசாங்கத்தின் அனைத்து பிரதானிகளும் பொறுப்புக்கூற வேண்டிய சூழ்நிலையில், அதனை மறந்து மத்திய வங்கி ஆளுநரை இலக்கு வைத்து பல கடுமையான அவதூறுகளும் குற்றச்சாட்டுகளும் அரசாங்க தரப்பால் முன்வைக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

02

## ஓய்வுபெறும் வயது எல்லை 60 ஆக குறைப்பு சில துறைகளுக்கு பொருந்தாது

அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 60 ஆக குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும், தெரிவு செய்யப்பட்ட சில அத்தியாவசிய துறைகளுக்கு இது நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. மருத்துவம், தாதியர், பொறியியல் உள்ளிட்ட சில தொழில்களின் ஓய்வுபெறும் வயது எல்லை இதில் உள்ளடக்கப்படாது என அமைச்சின் செயலாளர் **M.M.P.K.**மாயாதுன்ன குறிப்பிட்டார். குறித்த தொழில்களில் ஈடுபடுபவர்கள் 63 வயது வரை பணியாற்றும் வகையில், அமைச்சரவையில் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என செயலாளர் சுட்டிக்காட்டினார். இது தொடர்பிலான சுற்றறிக்கை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும் என அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். இதன் பிரகாரம், இந்த ஆண்டு இறுதியில் 20,000-இற்கும் அதிகமானவர்கள் ஓய்வுபெறவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்

## பசில் ராஜபக்ஷவின் பயணத்தடை நீக்கம்

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு 2023 ஜனவரி 15ஆம் திகதி வரை வெளிநாடு செல்ல உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் தொடர்பில் விசாரணை நடாத்துமாறு அரசாங்கத்திற்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவின் பிரதிவாதிகளில் ஒருவராக பசில் ராஜபக்ஷ பெயரிடப்பட்டுள்ள வழக்கில் முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு பயணத்தடை விதிக்கப்பட்டு நீடிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், பசில் ராஜபக்ஷ அடுத்த வாரம் மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு செல்வதற்காகவும், சில தனிப்பட்ட விடயங்களை மேற்கொள்ளவும் எதிர்பார்ப்பதாக, அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றிற்கு அறிவித்ததைத் தொடர்ந்து உயர் நீதிமன்றம் இவ்வனுமதி வழங்கியுள்ளது. குறித்த வழக்கு இன்று (02) ஐவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிபதிகள் குழாம் இவ்வுத்தரவை வழங்கியது.

## சிலிண்டர்கள் விலை மேலும் குறைப்பு

செப்டெம்பர் 05ஆம் திகதி நள்ளிரவு முதல், **Litro** சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை மேலும் குறைக்க தீர்மானித்துள்ளதாக, லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். அதற்கமைய, திருத்தப்படும் புதிய விலைகள் பின்னர் அறிவிக்கப்படுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த ஓகஸ்ட் 09ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் பின்வருமாறு குறைக்கப்பட்டன: 12.5**kg** – ரூ. 246 இனால் குறைப்பு, **5kg** – ரூ. 99 இனால் குறைப்பு, **2.3kg** – ரூ. 45 இனால் குறைப்பு அதன் அடிப்படையில் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் லிட்ரோ சிலிண்டர்களின் விலைகள்: 37.5**kg** – ரூ. 18,150, 12.5**kg** – ரூ. 4,664, 5**kg** – ரூ. 1,872, 2.3**kg** – ரூ. 869.

## பிச்சையெடுத்தாவது பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்க நடவடிக்கை எடுப்பேன்

பிச்சையெடுத்தாவது பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்க நடவடிக்கை எடுப்பேன் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (01) அமைச்சின் அறிவிப்பை முன்வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அமெரிக்காவினால் வழங்கப்பட்ட உணவு பொருட்கள் தொடர்பில் இந்த பாராளுமன்றத்தில் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன. சில ஊடகங்களும் இதனை பிரசாரப்படுத்தி இருந்தன. இவ்வாறான உதவிகள் இப்போது மட்டுல்ல நாங்கள் பாடசாலை செல்லும் காலத்திலும் அமெரிக்காவினால் வழங்கிய மாவினால் ஆன பிஸ்கட்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தன. இந்நிலையில் யுனிசெப் போன்ற அமைப்புகள் பிள்ளைகளின் போசனை மட்டம் தொடர்பில் ஆராய்ந்து போசனைகளை அதிகரிப்பதற்காக வேலைத் திட்டங்களை முன்வைக்கின்றன. இதன்படி ஏதேனும் உதவிகள் கிடைத்தால் அவற்றை பெற்றுக்கொள்ள வேண்டும். அமெரிக்காவும் உதவிகளை வழங்கியுள்ளது. நான் பிச்சையெடுத்தாவது பிள்ளைகளுக்கு உணவை வழங்க முடியுமென்றால் அதனை நான் செய்வேன். மாணவர்களுக்கு போசனைகளை அதிகரித்து கல்வி வளர்ச்சிக்கு என்ன செய்ய முடியுமோ அதற்காக முடிந்தளவுக்கு பங்களிப்பை வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றேன் என்றார்.

## உயர்தரப் பாடத்தில் விளையாட்டுப் பாடத்தை உள்ளடக்க நடவடிக்கை

க.பொ.த உயர் தரத்தில் விளையாட்டு பாடத்தை உள்ளடக்குவதற்கு தேவையான பூர்வாங்க பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார். .விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடலில் அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

## மலையக மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

மத்திய மலை நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினை தொடர்ந்து நுவரெலியா மாவட்டத்தில் பல பிரதேசங்களுக்கு அடை மழை பெய்து வருகிறது. நீர் போசன பிரதேசங்களில் பதிவாகி அதிக மழை வீழ்ச்சி காரணமாக நேற்றைய தினம் கெனியோன் நீர்த்தேக்கத்தில் இரண்டு வான் கதவுகள் சுமார் 6 அங்குலம் வரை திறந்து விடப்பட்டன. இதே நேரம் நோட்டன்பிரிஜ் பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் அனைத்திலும் நீர் வான் பாய்ந்தன. இந்த நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக களனி கங்கையின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் நீர்த்தேக்கத்திற்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர் தேக்கத்திற்கு பொறுப்பான பொறியியலாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பல பிரதேசங்களில் மண் சரிவு அபாயமும் ஏற்பட்டுள்ளன. இந்த மண் சரிவு அபாயம் காணப்படும் பிரதேசங்களில் வாழும் மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

## தகவல் அறியும் உரிமைக்கு புதிய அணுகுமுறை

சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக அரச நிறுவனங்களுக்கு வருகின்ற பொது மக்களுக்கு உடனடி சேவைகளை வழங்குவது கட்டாயமாகும் என சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அறிவுறுத்தல் விடுத்துள்ளார். பொதுமக்களின் வசதிக்காக சகல அமைச்சுகள் மற்றும் அரச அதிகாரிகளும் செயல்படவேண்டியது முதன்மையான பொறுப்பாகும் என்பதுடன், இதன்போது எந்தவொரு நபரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதற்கு இடங்கொடுக்காது, வினைத்திறனான சேவையை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று சகல அமைச்சுக்கள் மற்றும் அரச திணைக்களங்களிலும் முன்னெடுக்கப்பட வேண்டும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க குறிப்பிட்டார். ஜனாதிபதி செயலகத்திடமிருந்து பொது மக்கள் தங்களுக்கு தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளுவதற்காக பொது மக்களின் வசதி கருதி தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## சிறுபான்மை மக்களை அடக்கி ஆள நினைப்பது நாட்டை பலவீனப்படுத்தும்

சிறுபான்மை மக்களை அடக்கி ஆள நினைப்பது நாட்டை பலவீனப்படுத்தும் என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். **The Hindu** –விற்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இதனை கூறியுள்ளார். ராஜபக்ஸவினரின் ஆட்சியால் இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருவதாகவும் இந்த சூழ்நிலையில் இந்தியா வழங்கிவரும் உதவிகளுக்கு தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். இலங்கையில் அணிசேராக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிலையில், ராஜபக்ஸக்கள் குறிப்பிட்ட ஒரு நாட்டிற்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது பிற நாடுகளின் இலங்கை மீதான பார்வையை விலகச் செய்த நிலையில், நாடு தற்போது பிரச்சினைகளை சந்தித்து வருவதாகவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# கல்முனை கீரின் பீல்ட் பகுதியில் காட்டு யானைகள் அட்டகாசம்



( எம்.என்.எம். அப்ராஸ்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கல்முனை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கிறீன்ட் பீல்ட் தொடர் மாடி மக்கள் குடியிருப்பு பகுதியில் நேற்று வியாழன் (01)அதிகாலை காட்டு யானைகள் உள் நுழைந்து அங்கு அமையப் பெற்றுள்ள கல்முனை சமூர்த்தி வங்கி சுற்றுபுற வேலியின் ஒரு பகுதியையும் மற்றும் கல்முனை ரோயல் வித்தியாலத்தின் சுற்றுபுற வேலியின் ஒரு பகுதியை யும் சேதப்படுத்தி உள்ளதாக தெரியவருகிறது.

இரவு வேளைகளில் குறித்த பொது மக்கள் குடியிருப்பு பகுதியில் ஊடுருவும் காட்டு யானைகள் அயலிலுள்ள வயல் வெளிகளில் கூட்டமாக சஞ்சரித்து காணப்படும் நிலையில் யானைகள் குறித்த குடியிருப்பு பகுதியில் வந்து அதிகாலை 2.30 மணியளவில் சேதம் விளைவித்ததாக குடியிருப் பாளர்கள் தெரிவித்தனர். குறிப்பாக இரவு நேரங்களில் குறித்த குடியிருப்பு பகுதிகளில் காட்டு யானைகள் வருகை தரும் நிலையில் உள்ளதால் இதனால் மிகவும் அச்ச நிலையில் தாம் வசித்து வருவதாக பொது மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# குளிர்சாதனப்பெட்டியை திறந்த போது மின்சாரம் தாக்கி இளம் தாய் மரணம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

மின்சாரம் தாக்கி இளம் தாயொருவர் மரணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி மூன்றாம் வட்டாரம் மஸ்ஜிதுல் ஹைர் பள்ளிவாசல் வீதியிலுள்ள வீடொன்றிலே இந்த மரணச் சம்பவம் நேற்று(1) மாலை இடம்பெற்றுள்ளது. குறித்த வீட்டுப் பெண்மணி குளிர்சாதனப்பெட்டியில் இருந்த பொருட்களை எடுக்க திறந்த போது குளிர்சாதனப்பெட்டியில் மின் ஒழுக்கு ஏற்பட்டிருந்த காரணமாக மின்சாரம் தாக்கியதில் மரணமடைந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இவ்வாறு மரணமடைந்த 35 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான அபூபக்கர் பஸ்மியா என்பவரின் உடல் பிரேதே பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிண்ணியாவில் சிவில் சமூக நிறுவனங்களின் திறன் விருத்தியை அதிகரிக்கும் செயலமர்வு



(அ . அச்சுதன்)

ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் நிதியுதவியுடன் சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசன் கிண்ணியா அமைப்பினரின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 சிவில் சமூக அமைப்புகளின் திறன் விருத்தியை மேம்படுத்தும் செயலமர்வொன்று கிண்ணியா விஷன் மண்டபத்தில் இன்று நடைபெற்றது. **PEACE** எனும் இப்புதிய செயற்திட்டம் சமூகத்தின் ஒன்றிணைக்கப்பட்ட செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கான மக்களின் ஈடுபாட்டை மேம்படுத்தல் **People's Engagement and Action For Civic Empowerment(PEACE)** எனும் தலைப்பில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 20 சிவில் சமூக அமைப்புகளை ஜனநாயக மற்றும் அபிவிருத்தி துறையில் மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேற்படி நிகழ்ச்சியில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 11 பிரதேச செயலகங்களிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 20 சிவில் சமூக அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் அதன் முக்கிய உறுப்பினர்கள் ஆகியோரின் தலைமையில் சிவில் சமூக நிறுவனங்களின் திறன் விருத்தியை அதிகரிக்கும் நோக்கில் திருகோணமலை சிவில் மன்றம் **(Trinco Civic Forum)** என்ற அமைப்பொன்று உருவாக்கப்பட்டது. இதன் போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பயனாளிகளின் விபரங்களைத் திரட்டல், சிவில் சமூக அமைப்புகளின் திறன் விருத்தியை மேம்படுத்தும் பணியினை ஆரம்பித்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இந்நிகழ்வின் வளவாளராக திரு. சுஜீவன் சித்ரவேல் மற்றும் அவரோடு கடமையாற்றும் திரு. மதியழகன், நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷிக் அலாப்தீன், கணக்கு உதவியாளர் நிஷாத் சுபைர் மற்றும் ஊடக அதிகாரி ஆதில் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய வங்கி ஆளுநருக்கு எதிரான சதியை

மத்திய வங்கியின் ஆளுனர் இரட்டைக் குடியுரிமை கொண்டவர் என்று குற்றம் சாட்டி, தனது கைக்கூலிகளில் ஒருவரை மத்திய வங்கியின் ஆளுநராக்கும் சதி நாடகமொன்றை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மத்திய வங்கி ஆளுநர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு மேற்கொண்ட நடத்தை மிகவும் கேவலமானது எனவும் அவர் தெரிவித்தார். சர்வகட்சி அரசாங்கம் குறித்து நகைப்புக் கதை பேசுவதை விட இத்தருணத்தில் அரசாங்கத்தின் பிரதானிகளுக்கு இடையில் அடிப்படை உடன்பாடு ஏற்பட வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், இவ்வாறானதோர் உடன்பாடு இல்லாத சூழ்நிலை சர்வ கட்சி ஆட்சியைப் பற்றி சிந்திப்பது கூட சாத்தியமா எனவும் அவர் கேள்வி எழுப்பினார். இந்த இக்கட்டான தருணத்தில் நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைக்கு தனது ஆதரவைக் கோரும் விடயத்திலும், அரசாங்க தரப்பிலும், நல்ல இணக்கப்பாடு ஏற்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் இலத்திரனியல் பத்திரிகை வெளியீட்டு வைப்பு

(சுதா)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் இலத்திரனியல் பத்திரிகை ஒன்று இன்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனினால் நேற்று(01) திகதி வியாழக்கிழமை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து இப்பத்திரிகை உத்தியோகபூர்வமாக வெளியீட்டு வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலக ஊடகப் பிரிவினால் வெளியிடப்படும் செய்திகளின் தொகுப்பாக இச்செய்தி மடல் மாதாந்தம் வெளியிடப்பட்டு வந்த நிலையில் தற்போது இப்பத்திரிகை இலத்திரனியல் பத்திரிகையாக மாதாந்தம் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. "மாவட்ட செயலக செய்தி மடல்" எனும் பெயரில் வெளியிடப்பட்டுள்ள இச்சஞ்சிகையில் மாவட்டத்தின் அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், கலாசாரம், விளையாட்டு, சாதனைகள், மற்றும் புத்தாக்கம் என பலவிடயங்களை உள்ளடக்கி இலகுவாகவும், சரியாகவும், விறுவிறுப்பாக வாசகர்கள் மனங்கவரும் விதத்தில் வடிவமைக்கப்பட்டு கணனி, அலைபேசி மூலமாக உலகின் எப்பாகத்திலிருந்தும் தகவல்களை அறிந்து கொள்ளும் விதத்தில் இலத்திரனியல் சஞ்சிகையாக வெளியிடப்பட்டுள்ளது.

இதன்போது அரசாங்க அதிபர் கருணாகரன் கருத்து தெரிவிக்கையில் பொறுப்புவாய்ந்த அரச நிறுவனம் என்றவகையில் மாவட்டம் சார்ந்த பல்வேறு விடயப் பரப்புகளில் தகவல்களையும், தரவுகளையும் முறையாகவும், சரியாகவும், தெளிவாகவும் இப்பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். மேலும் பிரதேச செயலகப் பிரிவுகளில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பான செய்திகளுக்கு தனியான பிரிவுகளை ஒதுக்கவேண்டும் என்பதுடன் மிகச் சரியான தகவல்களை உரிய அதிகாரிகள் ஊடகப் பிரிவிற்கு வழங்கி ஒத்துளைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மாவட்ட ஊடகப் பிரிவு பொறுப்பதிகாரி வீ.ஜீவானந்தனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந், காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.நவரூபரஞ்ஜினி முகுந்தன், பிரதம கணக்காளர் திருமதி.இந்திராவதி மோகன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் திருமதி. காயத்திரி ரமேஸ் உட்பட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022
தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# கொழும்பில் இளம் ஊடகவியலாளர்களுக்கான ஊடகப் பயிற்சிநெறி




**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நடாத்தும் தமிழ் பேசும் இளம் ஊடகவியலாளர்களுக்கான ஊடகப் பயிற்சிநெறி நாளை (03) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு மருதானை வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் இடம்பெறும். சிரேஷ்ட ஊடகவியலாளர் சமீஹா சபீரின் ஏற்பாட்டில், நாடளாவிய ரீதியில் இருந்து சுமார் 50 இளம் ஊடகவியலாளர்கள் கலந்து கொள்ளும் இவ்வூடகப் பயிற்சி நெறியின் வளவாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் நௌஷாட் மொஹிடீன் கலந்து கொண்டு ஊடகத்தைக் கையாளும் முறை உட்பட ஊடகத்தில் உள்ள பல நுணுக்கமான விடயங்கள் குறித்தம் பயிற்சியோடு கலந்த விரிவாக விளக்கவுள்ளார்.

இளம் ஊடகவியலாளர்கள் மத்தியில் இருக்கும் பல்வேறு சந்தேகங்களுக்கும் இதன்போது விளக்கமளிக்கப்படவுள்ளன. மேலும் சிரேஷ்ட ஊடகவியலாளர்களின் விரிவுரைகளும் இதன்போது இடம்பெறவுள்ளதும் சிறப்பம்சமாகும். காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் இடம்பெறும் இப்பயிற்சி நெறியின் பின்னர் சான்றிதழ் வழங்கும் வைபவம் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீ இப்திகார் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில், கௌரவ அதிதிகளாக இலங்கை ஜே.ஜே.பௌண்டேசனின் பணிப்பாளர் ஐ.வை.எம்.ஹனீப் மற்றும் அகில இலங்கை வை.எம். எம்.ஏ.பேரவையின் தலைவர் சஹீட் எம்.ரிஸ்மி உட்பட ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்வர்.

இலங்கை ஜே.ஜே.பௌண்டேசன் மற்றும் அகில இலங்கை வை.எம்.எம். ஏ. பேரவையின் பூரண அனுசரணையில் இடம்பெறும் இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் அனைத்து இளம் ஊடகவியலாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டத்தில் 761 மாணவர்களுக்கு ‘சிப்தொர’ புலமைப்பரிசில்

**( வாஸ் கூஞ்ஞ)**

சமுர்த்திஅபிவிருத்திவங்கிஊடாகசமுர்த்தி உதவி பெரும் பயனாளிகளின் குடும்பங்களில் உள்ள கல்விப் பொதுத்தராதர சாதரண தரம் சித்தியடைந்து உயர்தரக் கல்வியை தொடர்கின்ற மாணவர்களின் கல்வி ஊகக்குவிப்புக்காக சமுர்த்தி ‘சிப்தொர’ புலமைப்பரிசில் மன்னார் மாவட்டத்தில் 761 மாணவர்கள் நன்மை பெறுகின்றனர்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் மாணவர்களுக்கான சமுர்த்தி ‘சிப்தொர’ புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தலைமையில் வியாழக்கிழமை (01.09.2022) மன்னார் நகர மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் மன்னார் மாவட்ட செயலாளருமான திருமதி ஸ்ரான்லி டி மெல் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கொடுப்பனவு சான்று பத்திரங்களையும், காசோலையினையும் வழங்கிவைத்தார். சமுர்த்தி அபிவிருத்தி வங்கி ஊடாக சமுர்த்தி உதவி பெரும் பயனாளிகளின் குடும்பங்களில் உள்ள கல்விப் பொதுத்தராதர சாதரண தரம் சித்தியடைந்து 2021–2023 கல்வியாண்டில் உயர்தரக் கல்வியை தொடர்கின்ற மாணவர்களின் கல்வி ஊகக்குவிப்புக்காக குறித்த சமுர்த்தி ‘சிப்தொர’ புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. மன்னார் மாவட்டத்திலிருந்து 761 மாணவர்கள் இந்த புலமைப்பரிசில் கொடுப்பனவை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் ஜனாப் அலியார் திட்டமிடல் பணிப்பாளர் க.மகேந்திரன் உட்பட பிரதம கணக்காளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், பாடசாலைகளின் அதிபர்கள் இசமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரலின் 33 தினம் மன்னாரில்





**( வாஸ் கூஞ்ஞ)**

தமிழ் மக்களின் உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசுக்கும் நட்பு நாடான இந்தியாவுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் வலியுறுத்தும் முகமாக வடக்கு கிழக்கு வாழ் மக்கள் தமது சாத்வீகமாகன ஜனநாயகமான நூறுநாட்கள் செயல்முனைவின் விழிப்புணர்வு போராட்டம் ஆவணி மாதம் முதலாம் திகதி ஆரம்பித்து வெள்ளிக்கிழமை (02.09.2022) 33 வது நாளை எட்டியுள்ளது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் எட்டு மாவட்டங்களிலும் நடைபெறும் நூறு நாட்கள் இவ் செயல் முனைவானது வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரனையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இனையம் (போரம்) மற்றும் ‘மெசிடோ’ நிறுவனங்களின் ஏற்பாட்டில் இவ் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது இவ் செயல் முனைவின் 33 வது நாள் மன்னார் முசலி பிரதேச செயலகப் பிரிவில் சிலாவத்துறையில் வெள்ளிக்கிழமை (02.09.2022) காலை 10 மணியளவில் புதிய பஸ் நிலையத்தில் முசலி பிரதேச பகுதியிலிருந்து நாலா பக்கங்களிலிருந்தும் வந்த மக்கள் தங்கள் உரிமைகளுக்கான கவனயீர்ப்பு போராட்டத்தில் ஒன்றுகூடியபோது அவர்களுக்கு இந்த 100 நாட்கள் செயல் முனைவு பற்றிய விளக்கவுரையும் அளிக்கப்பட்டது. இவ் போராட்டத்தின்போது ‘ஒன்று கூடுவது எமது எரிமை’ . ‘கருத்துச் சுதந்திரம் எமது உரிமை’ , ‘கௌரவ உரிமையுடன் அரசியல் தீர்வு வேண்டும்’ போன்ற வாசகங்களுடன் பதாதைகளை ஆண்கள் பெண்கள் இரு பாலாரும் தாங்கியவர்களாக இவ் போராட்டத்தில் கலந்து கொண்டனர். கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரலாக இவ் செயல் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

இதற்கான விளக்கவிரையை மன்னாரில் சிறந்த சட்டத்தரனியாக விளங்கும் சட்டத்தரனி செல்வராஜ் டினேஷ் மற்றும் மெசிடோ நிறுவன மன்னார் பணிப்பாளர் யட்சன் பிகிராடோ ஆகியோர் நிகழ்த்தியதுடன் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரலாக மக்களும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

# தெற்காசிய உதைப்பந்தாட்ட போட்டிக்கான இலங்கை அணியில் மட்டக்களப்பு வீரர்



இலங்கை உதைப்பாந்தாட்ட அணியில் விளையாடுவதற்காக மட்டக்களப்பு கூழாவடி டிஸ்கோ அணியின் வீரர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தெற்காசிய உதைப்பந்தாட்ட போட்டிகள் இம்முறை இலங்கையில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன, இந்நிலையில் 17 வயதிற்குட்பட்ட இலங்கை உதைப்பந்தாட்ட அணியில் விளையாடுவதற்காக மட்டக்களப்பு கூழாவடி டிஸ்கோ அணியின் வளர்ந்து வரும் வீரர் விஜித் அனெக்சன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தன்னாமுனை புனித ஜோசேப் வித்தியாலயத்தின் மாணவரான இவர் சிறுவயது முதலே பாடசாலை மட்டம் தொடக்கம் தேசிய மட்டம் வரை பல போட்டிகளில் விளையாடி அதீத திறமைகளை வெளிப்படுத்தி வந்துள்ளதுடன், தனது அணியின் வெற்றிக்கும் பெரும் பங்களிப்பினை வழங்கி வந்துள்ளார். இதன்படி தேசிய அணியில் இணைக்கப்படுள்ள விஜித் அனெக்சன் எதிர்வரும் 5 ஆம் திகதி ரெஸ்கோர்ஸ் சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ள பங்களாதேஸ்•க்கு எதிரான முதல் போட்டியில் களமிறங்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் 1000 தென்னங் கன்றுகள்



**வடமலை ராஜ்குமார்**

சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் 1000 தென்னங் கன்றுகள் சர்வதேச பசுமை வனம் அமைப்பினால் இன்று 02ம் திகதி வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரத விருந்தினராக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டீ.உ.மே. ஜெயவிக்ரம கலந்து கொண்டனர்.

பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள இலுப்பங்குளம் கிராமத்தினை தென்னை வளத்தில் தன்னிறைவான கிராமாக மாற்றும் செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாகவே இது அமையப் பெற்றுள்ளது என சர்வதேச பசுமை வனம் அமைப்பின் இணைப்பாளர் வு.ஆ.. யூஜின் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கும் போது தமது அமைப்பின் மூலம் வழங்கப்படவுள்ள தென்னங்கன்றுகள் இங்குள்ள குடும்பங்களுக்கு தலா 03 கன்றுகள் வீதம் பகிர்ந்தளிக்கப்படும் தொடர்ச்சியாக 05 ஆண்டுகளுக்கு இவ்வாறு 03 கன்றுகள் வழங்கப்படுவதுடன் அதற்கான மேற்பார்வையும் இடம் பெற ஏற்பாடுகள் உள்ளது. இதன் மூலம் கிடைக்கும் தேங்காய் மற்றும் தும்பு முதலியவற்றை மூலப் பொருட்களை வைத்து குடிசை கைத்தொழிலை ஆரப்பிக்க திட்டம் இருப்பதாகவும் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்யும் செயற்பாடுகளையும் இக்கிராமத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.அவர் தெரிவித்தார்.

மேலும் தென்னங்கன்றுகளை பராமரித்தல் தொடர்பாக தெங்கு அதிகார சபையில் இருந்து உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு தொழினுட்ப ரீதியிலான ஆலோசனைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பட்டினமும் சூழலும் பிரதேச சபை உறுப்பினர் ரட்ணாயக்க மற்றும் உறுப்பினர்கள் மற்றும் நகரசபையின் செயலாளர் வெ.இராஜசேகர் மற்றும் உறுப்பினர்கள் புலம்பேர்ந்த மக்களுக்கான உதவிகளை வழங்கும் லன்டனில் இருந்து வருகை தந்த சிறிகாந்தா மற்றும் அரசியல் பிரமுகர் அருன் கேமச்சந்திர உட்பட பல பிரமுகர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மொழி விழா







**ந.குகதர்சன்**

வாழைச்சேனை சக்ஸஷ் முன்பள்ளி ஏற்பாடு செய்த தமிழ் மொழி விழா 2022 வெகுவிமர்சையாக வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. முன்பள்ளி மாணவர்களின் தமிழ் மொழி விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், முன்பள்ளி தவிசாளர் ஏ.என்.எம்.றிழாவினால் ‘தமிழ் குழந்தை இலக்கியமும் முன்பள்ளிக் கல்வியில் அதன் வகிபாகமும்’ எனும் தலைப்பில் கருப்பொருள் உரையாற்றப்பட்டது. ‘மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்’ எனும் மகுட வாசகத்தை தாங்கி நின்ற இவ்விழாவின் போது, தமிழ் சிறுவர் இலக்கியங்களான தமிழ் சிறுவர் நாட்டார் பாடல்கள், தமிழ் சிறுவர் சித்திரக் கதைகள், சிறுவர் கதைகள், சிறுவர் பாடல்கள், விடுகதைகள், சிறுவர் அறிவியல் பத்திகள் ஆகிய தலைப்புகளில் பல்வேறு நிகழ்ச்சிகளை முன்பள்ளி மாணவர்கள் மேடையேற்றினர். சக்ஸஷ் முன்பள்ளி முகாமையாளர் எம்.எஸ்.எம்.மபாஸ் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம். ரி.எம்.றிஸ்வி, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை வைத்தியர் எம். என்.எப்.முப்லிஹா, மட்டக்களப்பு மத்தி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம். ஜாபிர் கரீம், கல்குடா கல்வி வலய முறைசாரா கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சீ.லோகேஸ்வரி, மட்டக்களப்பு மத்தி வலய தமிழ் மொழி ஆசிரிய ஆலோசகர் எச். எம்.ஆதம்லெப்பை, வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர், வாழைச்சேனை வை. அஹமட் வித்தியாலய அதிபர் யூ.எல்.எம்.ஹரீஸ், வாழைச்சேனை ஹைராத் வித்தியாலய அதிபர் யூ.எல். அகமட், வாழைச்சேனை மெதடிஸ்த திருச்சபை வண. கே.எஸ்.நிஷாந்தன், ஓட்டமாவடி சிறாஜிய்யா அரபுக் கல்லூரி கல்விப் பிரிவு பிரதி அதிபர் மௌலவி. ஜே.அஸ்வர் நஹ்ஜி, கோறளைப்பற்று மத்தி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். எப்.எப்.முஜிபா, எழுத்தாளர்களான தமிழூராள் அனுஷ்திக்கா, கவிமணி கவி நுட்பம் பாயிஷா நௌபல், உதயகுமார் ரெமிலா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இவ்விழா திறம்பட உழைத்த முன்பள்ளி முகாமையாளர் எம்.எஸ்.எம். மபாஸ், தலைமை ஆசிரியர் தர்ஷினி ஸ்ரீகாந்த், ஆசிரியர்களான என்.ஜே.நஸ்மிலா, எம். பி.பிர்தௌசியா, ஆர்.ஸ்ரீதிவாஜினி, எச்.எம்.எப்.சாஜிதா ஆகியோர் முன்பள்ளி தவிசாளரினால் பாராட்டப்பட்டனர்.

தமிழ் மொழி விழாவில் திறமையை வெளிப்படுத்திய 51யூ.கே. ஜி மாணவர்களுக்கு இதன்போது அதிதிகளினால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. மறந்துபோயுள்ள சிறுவர் இலக்கியத்திற்கு புத்துயிரளிக்கும் வகையில் 40க்கு மேற்பட்ட நூல்கள் மேடையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்த விசேட அம்சமாகும்.

# இன்று காரைதீவு- மண்டூர் திருத்தல பாதயாத்திரை



**( காரைதீவு நிருபர் சகா)**

காரைதீவில் இருந்து மண்டூர் முருகன் ஆலயத்திற்கான திருத்தல பாதயாத்திரை நாளை(3) சனிக்கிழமை அதிகாலை ஆரம்பமாகிறது. நாளை (3) சனிக்கிழமை அதிகாலை நான்கு மணியளவில் மாவடி ஸ்ரீ கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து புறப்படும் பாதயாத்திரை ஐந்து மணியளவில் கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்து அங்கிருந்து கல்முனையை நோக்கி புறப்படும் .

கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயம் ,ஸ்ரீ முருகன் ஆலயத்தை அடைந்து நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ,கிட்டங்கி, சவளக்கடை ,நாவிதன்வெளி, வேப்பயடி ,தம்பலவத்தை சென்று மண்டூர் ஆலயத்தை சென்றடைய இருக்கின்றது .கடந்த இரண்டு வருடங்களுக்கு பிற்பாடு இடம்பெறும் பாதயாத்திரை என்பதால், சுமார் 3000 அடியார்கள் இந்த பாதயாத்திரையில் கலந்து கொள்ளலாம் என்று ஏற்பாட்டுக் குழு தலைவர் கு.ஜெயராஜி தெரிவித்தார்.

# அனுமதியற்ற முறையில் வீதி ஓரங்களில் மீன் வியாபாரம் அகற்றப்பட்டது



**பாறுக் ஷிஹான்**

அனுமதியற்ற முறையில் நற்பிட்டிமுனை பகுதி வீதி ஓரங்களில் மீன் வியாபாரம் செய்யும் நடவடிக்கையை முற்றாக தடை செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கை மேற்கொண்டதை அடுத்து மக்கள் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர். சட்டவிரோதமாக மீன் விற்பனையில் ஈடுபடுவதனால் வீதி போக்குவரத்து பாதிக்கப்படுகின்றது என்ற செய்தி கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளியாகி இருந்த நிலையில் இன்று (2) காலை கல்முனை மாநகர சபை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுத்திருந்தது.

இதற்கமைய மாநகர சபையின் அதிகாரிகள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை பகுதியின் வீதியின் இரு மருங்குகள் முக்கிய சந்திகளில் எவ்வித அனுமதியும் இன்றி மீன் விற்பனை செய்யப்பட்ட இடங்களை அடையாளம் கண்டு அவற்றை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போது வீதியோரங்களில் மீன் விற்பனையாளர்களினால் போடப்பட்ட மேசைகள் உள்ளிட்ட தளபாடங்கள் மாநகர உழவு இயந்திரங்களில் ஏற்றி செல்லப்பட்டுள்ளன.

கடந்த 1 வருடமாக இவ்வாறான செயற்பாடுகள் தொடர்வதனால் பிரதான வீதியில் பயணம் செய்பவர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதுடன் இவ்வாறான மீன் விற்பனை வீதியை ஆக்கிரமிக்கும் அளவிற்கு சென்றுள்ளதுடன் வீதி விபத்துக்களும் இடம்பெற்றுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. புதிய சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ள விடயத்தை மாநகர சபை அதிகாரிகள் அவ்விடத்தில் வைத்து இவ்வாறு மீன் விற்பனையில் ஈடுபட்டவர்களிடம் அறிவுறுத்தல் வழங்கியதுடன் இனி வரும் காலங்களில் வீதிகளில் மீன்களை விற்பனை செய்ய வேண்டாம் என எச்சரிக்கையும் வழங்கி சென்றுள்ளனர்.

# சாய்ந்தமருது ஆஷிக், சப்றாஸ் ஆகியோருக்கு பாராட்டு



**(நூருள் /ஹுதா உமர்)**

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் மற்றும் அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்றாஸ் ஆகியோரை பாராட்டும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை சாய்ந்தமருது "சீ பிறீஸ்" சுற்றுலா விடுதியில் சாய்ந்தமருது சமுர்த்தி மகா சங்க உதவி முகாமையாளர்கலாநிதிறியாத்ஏ.மஜீத்தலைமையில் இடம்பெற்றது. சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆஷிக், நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தில் முதுநிலை பட்டம் பெற்றமைக்காகவும், அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் மாவட்ட மக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் சிறந்த முறையில் பணியாற்றி வருவதையிட்டும் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி பிரிவு உத்தியோகத்தர்களால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், சமுர்த்தி மகா சங்க முகாமையாளர் ஏ.எல்.யூ. ஜ•னைதா, வங்கி முகாமையாளர் எஸ். றிபாயா, கருத்திட்ட முகாமையாளர் ஏ.எம்.ஏ.கபூர், உதவி முகாமையாளர் எம்.யூ.ஹில்மி, வலய உதவி முகாமையாளர் எம்.எஸ்.எம். நௌ ஷாட், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.ஜஃபர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். றிகாஸா ஷர்பீன், கணனி உதவியாளர் எஸ். சாபித் அக்மல் உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.

# வெள்ளத்தால் பாதிப்புகளுக்கு உள்ளாகியோருக்கு அக்கரைப்பற்று மக்கள் உதவிக்கரம்



**(வாஸ் கூஞ்ஞ)**

அண்மைகாலமாக மலையகப் பகுதியில் பெய்துவரும் மழை காரணமாக நாவலப்பிட்டி பகுதியிலும் மக்கள் வெள்ளத்தினால் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருவதை கவனத்தில் எடுத்துக் கொண்ட அக்கரைப்பற்று ஜம்மியதுல் உலமா , சதாத் நிதியமும் மற்றும் 'இன்ஸ்பீரிங் யுத்ஸ்' ஆகியன இனைந்து அக்கரைப்பற்று மக்களின் அன்பளிப்பு என்ற தொனியில் பாதிப்டைந்த மக்களுக்கு பொருட்கள் வழங்கி வைத்துள்ளனர்.

நாவலப்பிட்டியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இவ் மக்களுக்கு பாடசாலை உபகரணங்கள் , உணவு பொதிகள் மற்றும் தலையனை பொருட்கள் என்பன நாவலப்பிட்டி நகர் ஜ/ம் ஆ சூபள்ளிவாயலில் வைத்து நாவலப்பிட்டி பள்ளி வாயல்கள் சம்மேளன பிரதிநிதிகளிடமும் அவர்கள் ஊடாக பாடசாலைகள் மாணவர்களுக்கும் கையளித்தனர். அநாவலப்பிட்டியில் உள்ள அல் அஸ்ஹர் பாடசாலை , கதிரேசன் பாடசாலை , ஒக்ஸ்வேட் பாடசாலை மற்றும் அல் சபா பாடசாலைகளிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான உபகரணப் பொருட்களே வழங்கி வைக்கப்பட்டன.

உணவு பொதிகள் மற்றும் தலையனைகள் ஆகியன நாவலப்பிட்டி நிவாரண சேமிப்பு மையத்தில் வழங்கப்பட்டது. இதற்கான உதவிகளையும் வாகன வசதிகளையும் தனவந்தர்கள் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# கிழக்கில் நல்லிணக்கத்தை நோக்கி களப்பயணம்



**( வாஸ் கூஞ்ஞ)**

கிழக்கு பகுதியில் ஐக்கிய களப் பயணத்தை முன்னிட்டு நான்கு மதங்களைச் சார்ந்தவர்கள் மதத் தலைவர்கள் மற்றும் பொது நிலையினர் கடந்த வெள்ளிக்கிழமை (26.08.2022) காத்தான்குடி , சொறிக்கல்முனை , வீரமுனை . அம்பாறை மற்றும் புத்தங்கள ஆகிய இடங்களுக்குச் சென்று அவ் பகுதிகளிலுள்ள பள்ளிவாசல் , கிறிஸ்துவ மற்றும் கத்தோலிக்க தேவாலயங்கள் . இந்து ஆலயங்கள் மற்றும் புத்த விகாரைகள் ஆகியவற்றுக்குச் சென்று தரிசனத்தை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக மன்னாரிலிருந்து தற்பொழுது மட்டக்களப்பு பகுதிக்குச் சென்று கடமைபுரிந்து வரும் மெதடிஸ்த திருச்சபையின் போதகரும் நீண்ட காலமாக சமாதானத்துக்காக அர்ப்ணித்து செயல்படுபவருமான அருட்பணி கே.ஜெகதாஸ் அடிகளார் இவர்களின் களப்பயணம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், தங்களின் களப்பயணமானது ஒவ்வொரு சமயங்களினதும் பண்பாடுகள் அவர்களின் விழுமியங்களை கேட்டு அறிந்து கொள்ளும் நோக்குடனும், அத்துடன் அனைவரும் ஒன்றினைந்து மாவட்டத்திலும் நாட்டிலும் சமாதானத்துக்கான செயல்பாடுகளையும் நல்லிணக்கத்தையும் கொண்டு வரும் நோக்குடனே இவைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும், இந்த குழுவில் 46 நபர்கள் கலந்து கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தென்கிழக்கு பல்கலையில் "சுகாதார மையம்"



**நூருள் /ஹுதா உமர்**

பல்கலைக்கழக மாணவர்களினதும் பணியாளர்களினதும் நலன் கருதி தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் சுகாதார மையம் ஆரம்பிப்பது தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை உயர் அதிகாரிகள் குழுவினர் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு கள விஜயமொன்றை மேற்கொண்டனர். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸிடம் கேட்டுக் கொண்டதற்கினங்க இவ்விஜயம் மேற்கொள்ளப்பட்டன.

இவ்விஜயத்தில் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையிலான உயர் அதிகாரிகளும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.வீ.ஏ.வாஜித் மற்றும் பல் வைத்திய பிரிவு வைத்தியர் எம்.எச்.எம்.சரூக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது உபவேந்தர் கேட்டுக் கொண்டதற்கினங்க விரைவில் பல் வைத்திய பிரிவு உள்ளிட்ட சுகாதார மையம் அமைக்கப்படும் என்றும் அதற்கான அடித்தளத்தினை கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் விட்டிருக்கிறார் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.வீ.ஏ.வாஜித் தெரிவித்தார். பல்கலைக்கழக சமூகத்தின் அனைத்து மாணவர்களுக்கும் பணியாளர் களுக்கும் சுகாதார சேவைகளை வழங்குவதில் ஆரம்பிக்கப்படவுள்ள சுகாதார மையம் முக்கிய பங்கு வகிக்கும் என உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

சுகாதார மையத்தினால் உடல் நோய்களுக்கான சிகிச்சை மற்றும் குணப்படுத்தும் சேவைகளை உள்ளடக்கி, கல்வி வாழ்க்கையில் மாணவர்கள் சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் உபவேந்தர் தெரிவித்தார்.

# அட்டப்பள்ளம் சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்



**( காரைதீவு நிருபர் சகா)**

நிந்தவூர் அட்டப்பள்ளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தனை பஞ்ச குண்டபக்ச மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5ஆம் தேதி திங்கட்கிழமை நடைபெறுகின்றது. முன்னோடியாக இன்று (2) வெள்ளிக்கிழமை கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் ஆரம்பமானது. நாளை(3) சனிக்கிழமையும் நாளைமறுதினம்(4) ஞாயிற்றுக்கிழமையும் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வுஇடம் பெற இருக்கின்றது. காலை 10 மணி முதல் பிற்பகல் இரண்டு மணி வரை இடம்பெறும். தொடர்ந்து திங்கட்கிழமை காலை 6 .54 மணி முதல் 7. 31 மணி வரை உள்ள சுப வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற இருக்கின்றது என ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டல அபிஷேக பூசைகள் நடைபெறும்.

# கிழக்கில் சாதனை மாணவன் துவாரகேஷ் கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்



**( காரைதீவு நிருபர் சகா)**

கிழக்கில் சாதனை படைத்த மாணவன் தமிழ்வண்ணன் துவாரகேஷ் கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார் என்று சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம்.அமீர் புகழாரம் சூட்டினார். சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் இம்முறை வெளியான கபொத உயர்தர பரீட்சை முடிவின்படி, மூன்று பாடங்களிலும் மூன்று "ஏ" சித்திகளை பெற்ற மாணவிகளை பாடசாலைக்கு சென்று வாழ்த்தி பாராட்டினார் சமாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எஸ் எம் எம் அமீர் அவர்கள்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்த நிகழ்வு பாடசாலையில் திடீரென்று நடைபெற்றபோது பேசுகையில் தெரிவித்தார். பாடசாலை பிரதி அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் இந்த பாராட்டு நிகழ்வு இடம் பெற்றது . சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எஸ் எம்.எம். அமீர் அவர்களோடு பாடசாலை மேம்பாட்டு திட்ட பணிப்பாளர் உதவிகல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, நிர்வாக உத்தியோகத்தர் எம் ஏ எம் .முஷாரப் கலந்து கொண்டார்கள்.

மூன்று" ஏ" சித்திகளை பெற்று சாதனை படைத்த அமிர்தலிங்கம் குவார்த்தனா, சிவபரன் திவ்யபாரதி ஆகியோர் அங்கே பாராட்டி வாழ்த்தி கௌரவிக்கப்பட்டனர். அங்கு அவர் மேலும் கூறுகையில், தேசிய மட்டத்திற்கு இம்முறை எமது கிழக்கு மாகாணம் முக்கியமான பங்களிப்பை செய்திருக்கின்றது. உயிரியல் துறையில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற மாணவன் தமிழ்வண்ணன் துவாரகேஷ் எமது கிழக்கு மாகாண மாணவன் .அதிலும் நண்பர் சகாவின் பிறந்த ஊரான காரைதீவைச் சேர்ந்தவர் .அந்த வகையில் நமக்கெல்லாம் அம்மாணவனால் பெருமை கிடைத்திருக்கிறது. துவாரகேஷ் கிழக்கு மாகாணத்தில் கல்வி பயில்கின்ற ஏனைய மாணவர்களுக்கு ஒரு உற்சாகத்தை வழங்கி இருக்கின்றான். கல்வியிலேயே விழிப்புணர்ச்சி ஏற்படுவதற்கு சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த மண்ணில் இருந்து தோன்றிய துவாரகேஷ் முன்மாதிரியான மாணவராக திகழ்வதை யிட்டு நாமும் பெருமை அடைகின்றோம். மகிழ்ச்சி அடைகின்றோம்.

இது போல ஏனைய மாணவர்களும் கல்வியிலே சிறந்து விளங்க வேண்டும். நிற்க பின் தங்கிய நாவிதன்வெளி பிரதேசத்திலிருந்து சாதனை படைத்த குவார்த்தனா திவ்ய பாரதி ஆகிய மாணவிகளை வலயம் சார்பில் பாராட்டுகின்றேன். மேலும் இங்கு தோன்றிய 20 மாணவர்களுள் 18 மாணவர்கள் சித்தி பெற்றிருப்பதாக அதிபர் தெரிவித்தார். அவர்கள் அனைவரையும் அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்களையும் வலயம் சார்பில் பாராட்டுகின்றேன். இங்கு பயின்று உயர் கல்விக்காக கல்முனைக்கு சென்று அங்கு மருத்துவத் துறையிலும் ஏனைய துறையிலும் தெரிவான மாணவர்களும் இங்கு பாராட்டப்பட வேண்டும். எதிர்காலத்தில் பாடசாலை மேலும் மிளிர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். என்றார். நிகழ்வில் உப அதிபர் என்.வன்னியசிங்கம் உயர்தர பிரிவு தலைவர் எஸ்.ஜெகதீசன் என். கோடீஸ்வரன் உள்ளிட்ட உயர்தர ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

**கொக்கட்டிச்சோலை**
**ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர்**
**ஆலயம்**

## காண வாரீர்!



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206